'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVI | ஏப்ரல் கி.பி. 2025 | சான்று : 184



## எதிர்நோக்கே உயிர்ப்பு

தவக்கால களப்பணிகள் - 2025












# உங்கள் சகோதரனிடமிருந்து

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணி குடும்பமே,**

தந்தை கடவுள் மீது நம்பிக்கை கொள்பவர்களாகிய நம்மிடம் செயலாற்றுகிற அவரது வல்லமை எத்தனை ஒப்புயர்வு அற்றது. மேலானது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அக கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக! கடவுள் வலிமைமிக்க தம் ஆற்றலை கிறிஸ்துவிடம் செயல்படுத்தி இறந்த அவரை உயிர்த்தெழச் செய்து விண்ணுலகில் தமது வலப்பக்கத்தில் அமர்த்தினார் (எபே 1:19,20) என்று நாம் வாசிக்கிறபடி உயிர்த்தெழச் செய்யப்பட்ட நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமை என்னோடும் உங்களோடும் செயல்பட வாழ்த்துகிறேன். செபிக்கிறேன். அதற்காக நம் அகக் கண்கள் ஒளியூட்டப்பட தொடர்ந்து இறைவேண்டல் செய்கிறேன்.

அனைவருக்கும் என் இதயம் நிறைந்த கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தந்தை கடவுள் இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்ததால் நடந்தது என்ன? இதை புனித பவுலடியார் தெளிவாக விளக்குகிறார். அனைவருக்கும் மேலாக. அனைத்திற்கும் மேலாக. அவரை உயர்த்தினார். அனைவரையும் கிறிஸ்துவுக்கு அடிபணிய செய்தார். அப்படிப்பட்டவரின் உயிர்த்தெழுந்த வல்லமையை நாம் அனுபவிக்க வேண்டுமானால் நம் அகக்கண்கள் ஒளியூட்ட பட வேண்டும் (எபே 1:21-23).

1. நற்செய்தி ஒளியை காணும்படி நம் அகக் கண்கள் ஒளியூட்டப்பட வேண்டும். இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியை காண முடிவதில்லை (2 கொரி 4:4) என்று புனித பவுலடியார் கூறுகிறார். ஏனென்றால் அவரும் ஒரு காலத்தில் அந்நிலையில் தான் இருந்தார். திருத்தூதர் பணிகள் நூலில் ஒன்பதாம் அதிகாரத்தை தியானத்தோடு வாசியுங்கள். தமஸ்க்கு செல்லும் வழியில் ஏற்கனவே அவருக்கு இருந்த கண்கள் குருடாக்கப்பட்டு, அகக்கண்கள் ஒளியூட்டப்பட்டன. அதற்குப் பிறகு உயிர்த்த ஆண்டவரின் வல்லமையை அனுபவித்தார். அதை திட்டமும் தெளிவுமாக அறிவிக்கத் தொடங்கினார். இன்றைய நாள்களில் நம் திருஅவையில் பக்தர்கள் கூட்டம், ஏன் நம் பணி குடும்ப இயக்கத்திலும் பக்தர்கள் கூட்டம் (அகக் கண்கள் குருடாய் உள்ளவர்கள்) அதிகமாக உள்ளது. கடவுள் நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொன்னாரோ அதைச் செய்யாமல் அவரை திருப்தி படுத்துகிறோம் என்று பக்தி முயற்சிகளைச் செயல்படுத்துகிறோம். புதிது புதிதாக கண்டுபிடிக்கிறோம், அவற்றை எளிய விசுவாசம் என்று பெயர் வைத்து உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். பக்தி செயல்கள் செய்வது எளிது. தூய்மையாய், நேர்மையாய் வாழ்வது கடினம். எதிரிகளை, துரோகம் செய்தவர்களை, நம்மைப் பற்றி இல்லாதது பொல்லாதது சொன்னவர்களை. மன்னிப்பது. மறப்பது அவர்களுக்காக செபிப்பது. அவர்களுக்கு ஆசி கூறுவது. மிக மிகக் கடினம். மொத்தத்தில் அவருடைய மதிப்பீடுகளின் படி வாழ்வது கடினம். மெழுகுதிரி ஏற்றுவது. நாற்பது நாள் விரதம் இருப்பது. மொட்டை அடிப்பது. நடந்து செல்வது. ஆராதனை. ஒன்பது வார நவநாள் செய்வது இது

போன்ற பக்தி முயற்சிகளை செய்வது எளிது. பக்திமுயற்சிகளை மட்டும் செய்பவர்களை பார்த்து இயேசு ஆண்டவர் எப்படி சொல்லுகிறார் தெரியுமா? உங்களை எனக்கு தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே என்னை விட்டு அகன்று போங்கள். என வெளிப்படையாக அறிவிப்பேன் (மத் 7:23) என்று கூறுகிறார். மாறாக என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசுக்குள் செல்வர் (மத் 7:21) என்று தெளிவாக கூறுகிறார். பக்தி செயல்பாடுகள் அனைத்தும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளின் படி வாழ நம்மை தூண்ட வேண்டும். வாழ வைக்க வேண்டும். கடவுள் விரும்புவது அவர் விரும்புகிற வாழ்க்கையை நாம் வாழ வேண்டும் என்பதே. எனவே அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ நம் அகக்கண்கள் ஒளியூட்டப்பட்டு உயிர்த்த கிறிஸ்துவை அனுபவிப்போம்.

2. திரு விவிலியத்தில் உள்ள வியப்பானவற்றை கண்டுணர நம் அகக்கண்கள் ஒளியூட்ட பட வேண்டும். உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணறுமாறு என் கண்களை திறந்தருளும் (திபா 119 :18) என்று திருப்பாடல் ஆசிரியர் கதறுகிறார். அந்தக் கதறல் நமக்கு தேவையில்லை. ஏனென்றால் நம் அகக்கண்கள் ஒளியூட்டப்படுமாறு நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்து விட்டார். நாம் அவரிடம் அந்த வல்லமையை பெற்றுக்கொள்ளலாம். இறை வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவை திருவிவிலியத்தை வாசிக்கும் போதே அனுபவிக்கலாம். ஒளியூட்டப்பட்ட நம் அகக் கண்களால் திருவிவிலியத்தை வாசிப்போம். இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பை விட வியப்பானது எது இருக்க முடியும்?

3. கடவுளின் பராமரிப்பை காணும்படி நம் அகக்கண்கள் ஒளியூட்டப்பட வேண்டும். அப்பொழுது கடவுள் அவள் கண்களை திறந்து விட, அவள் நீருள்ள கிணற்றை கண்டாள் (தொநூ 21:19). தொடக்கத்திலிருந்து கடவுள் நம்மை பராமரித்து வருகிறார். ஆனால் நம் அகக் கண்கள் குருடாய் இருப்பதால் அவரது பராமரிப்பை உணர முடியவில்லை. ஆண்டவரின் உயிர்ப்பின் வல்லமையால் நம் அகக்கண்கள் ஒளியூட்டப்பட்டிருக்கின்றது. அதை உணர்ந்து வாழ்ந்தால். அக கண்கள் திறக்கப்பட நாடினால் அவரது பராமரிப்பை தொடர்ந்து அனுபவிக்க முடியும் ஆகாருக்கு அக கண்கள் திறக்கப்பட்டவுடன் தான் கடவுளின் பராமரிப்பை உணர்ந்தாள்

4. உயிரோடு இருக்கிற இயேசுவை காணும்படி நம் அகக் கண்கள் ஒளி யூட்டப்பட வேண்டும். கண்கள் திறக்கப்படாத மரியாவுக்கு இயேசு உயிரோடு தன் அருகில் நிற்பதை காண முடியவில்லை (யோவா 20 :14) எம்மாவு செல்லும் வழியில் தன்னோடு பேசிக்கொண்டு வருபவர் இயேசு கிறிஸ்து என்பதை சீடர்களால் உணர முடியவில்லை. ஏனெனில் அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டு இருக்கின்றனர் (லூக் 24:16). இன்றைய நாளில் இயேசு கிறிஸ்து விண்ணகத்தில் மட்டுமல்ல, நம்மோடு மட்டுமல்ல, நமக்குள்ளே உயிர்த்தெழுந்த இயேசு இருக்கிறார். அதை உணர, அனுபவிக்க நம் அக கண்கள் ஒளியூட்டப்பட வேண்டும்.

5. கடவுளின் பாதுகாப்பைக் காணும்படி நம் அகக்கண்கள் ஒளியூட்டப்பட வேண்டும். சிரியர்களின் படை மலையைச் சுற்றி வளைக்க மலையில் எலிசாவும்

அவருடைய பணியாளன் கேகசியும் மட்டுமே இருந்தனர். படைகளும் குதிரைகளும் தேர்களும் நகரை சூழ்ந்து இருப்பதை அவன் கண்டு பதறுகிறான், நடுங்குகிறான். அப்போது எலிசா ஒரு இறைவேண்டல் செய்கிறார். 'ஆண்டவரே இவன் பார்க்கும்படி இவன் கண்களை திறந்தருளும்' (2அர 6:17) என்று செபித்தார். பணியாளன் கண்கள் திறக்கப்பட்டவனாய் கடவுள் கடவுளின் பாதுகாப்புச் செயல்பாட்டை மலை எங்கணும் நெருப்பு குதிரைகளும் தேர்களும் எலிசாவை சூழ்ந்து இருப்பதைக் கண்டான் (2 அர 6: 17). நம் கண்கள் திறக்கப்பட்டால் தான் ,அவர் நமக்கு எவ்வளவு பாதுகாப்பு அளிக்கிறார் என்பதை உணர முடியும்.

6. கடவுளின் திருவுளத்தை அறிய நம் அகக்கண்கள் திறக்கப்பட, ஒளியூட்டப்பட வேண்டும். பிலயாம் கழுதை மீது கோபம் கொண்ட பொழுது அவரது கண்களை கடவுள் திறந்தார். உண்மையை உணர்ந்து கொண்டார் (எண் 22: 31 )அவருடைய திருவுளப்படி வாழ நம் அக கண்கள் திறக்கப்பட வேண்டும். அதன் பிறகு பிலயாம் கடவுளின் திருவுளப்படி வாழ்ந்தார். இன்றைக்கும் நாம் இறைத் திருவுளப்படி வாழ நம் அகக்கண்கள் திறக்கப்பட செபிப்போம்.

7. இறைமாட்சியை உணர, அனுபவிக்க நம் அகக் கண்கள் ஒளியூட்டப்பட வேண்டும். அதை காண்பதற்காக படைப்பே பேராவலுடன் காத்திருக்கிறது (உரோ 8: 18, 19) அதை காண்பதற்கு உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவரின் உயிர்ப்பின் வல்லமை வேண்டும் அதற்காக ஒருவர் ஒருவருக்காய் செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## மார்ச் 2025



## புதிய பணியாளர்கள் பயிற்சி

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 2.03.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்மின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 2.03.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 08.03.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 9.03.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி

அருள்பணி மையத்தில் 9.03.2025 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை M. சகாயமேரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 9.03.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -VII அமைதியகம், காயாவயலில் 16.03.2025 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 16.03.2025 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி T. ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 23.03.2025 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S.தைனேஸ்மேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

தஞ்சை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் 23.03.2025 அன்று நடைபெற்றது. 28 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி J. இளங்கோ, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## மார்ச் 2025 கடந்த மாதச் செயல்பாடுகள்

02.03. 2025 அன்று தவக்கால தவக்கால களப்பணி அணித்தலைவர்கள் பயிற்சி -I அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. இதில் 64 பேர் கலந்து கொண்டார்கள்.

02.03. 2025 அன்று தவக்கால களப்பணி அணித்தலைவர்கள் பயிற்சி -II அமைதியகத்தில் நடைபெற்றது. இதில் 40 பேர் கலந்து கொண்டார்கள்.

05.03.2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 34 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி S. பால்ராஜ், நற்பணி சகாய தமிழ் செல்வி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

05.03.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 85 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி J.அருள்செலின் ஆகியோர் தவக்கால தியானத்தை வழிநடத்தினர்கள்.

09.03.2025 அன்று இராயப்பன்பட்டி பங்கில் தவக்கால தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை நற்பணி சகாயராஜா, நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

09.03.2025 முதல் 500க்கு மேற்பட்ட நற்செய்தி பணியாளர்கள் நமது மறைமாவட்டத்தில் 78 பங்குகளிலும் பிற மறைமாவட்டங்கள் 10 பங்குகளிலும் களப்பணியாற்றிக் வருகிறார்கள்.

29.03.2025 அன்று கீழ உச்சாணி பங்கு இராதானுரில் நடைபெற்ற தவக்கால தியானத்தை செயலர், நற்பணி இராஜேந்திரன், நற்பணி மோட்ச அலங்காரம், நற்பணி. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்.

அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார். (1 யோவான் 4:8)
இந்த உலகத்தின் முதன்மை கடவுளே. அவர் இருக்கும் இடத்தில் எல்லா வளங்களும் நிறைந்திருக்கும். அவர் மனிதர்கள் மத்தியில் அன்பாய் இருக்கிறார். அன்பு ஒன்னிறிகைக்கும் ஆற்றல் கொண்டது. வேறுபாடுகள் இருந்தாலும் அந்த ஆற்றல் அனைத்தையும் ஒன்றாய் ஆக்குகின்றது. சமீபத்தில் விண்வெளிக்கு சென்று திரும்பிய வில்மூர், சுனிதா வில்லியம்ஸ ஆகியோர் பாதுகாப்பாக பூமி திரும்புதலை உலக மக்கள் ஆர்வமாய் எதிர்பார்த்தார்கள். அதற்குக் காரணம் மனித குலத்தின் மீது உள்ள அன்பு. இதுவே பலதரப்பட்ட மொழி, நாடு, இனம் என்றிருந்தாலும் ஒன்றிணைக்கிறது. அது மனித குலத்தை ஒன்றிணைத்து மாண்படையச் செய்கிறது. அதனாலேயே அனைத்திலும் அன்பே தலைசிறந்ததாக இருக்கிறது (1கொரி 13:13). கடவுள் இந்த உலகத்தின் மீது அன்பு கொண்டார். இந்த உலகம் என்றால் அதில் உள்ள மனிதர்களை மட்டுமல்ல அவர் படைத்த அனைத்தையும் அன்பு செய்தார் என்பது பொருள். எந்த அளவுக்கு என்றால் தன் ஒரே மகனையும் இந்த உலகிற்கு கொடுத்தார் (யோவான் 3:16).

அன்பில் இருப்பவையும் இல்லாதவையும்:

| இருப்பவை | இல்லாதவை |
|---|---|
| நீடிய சாந்தமுள்ளது | அன்புக்குப் பொறாமையில்லை |
| தயவுள்ளது | அன்பு தன்னைப் புகழாது |
| உண்மையில் மகிழ்ச்சியுறும் | இறுமாப்பாயிராது |
| சகலத்தையும் தாங்கும் | அயோக்கியமானதை செய்யாது |
| சகலத்தையும் விசுவாசிக்கும் | ஆணவம் கொள்ளாது |
| சகலத்தையும் நம்பும் | சினமடையாது |
| சகலத்தையும் சகிக்கும் | தீங்கு நினையாது |
| அன்பு ஒருக்காலும் ஒழியாது | அநியாயத்தில் சந்தோஷப்படாது |

அதனாலேயே தன்னை துன்புறுத்திய அந்த மக்களையும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போதும், இயேசு, மன்னித்தார் (லூக்கா 23:34) அவர் சொன்னதைச் செய்தார். ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை கொடுத்த இயேசு நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர் என்றும், அன்பு செய்வது சீடராக இருப்பதற்கு அடிப்படைத் தகுதி என்பதை தெளிவுற எழுத்தியம்பினார். அவரின் கல்வாரிப் பயணம் கூட அன்பின் பயணமாகும். நம்மை நண்பனாகவும் சகோதரனாகவும் பார்த்த இயேசு தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்று முழக்கமிட்டவர் அந்த சிறந்த அன்பு தன்னிடம் உள்ளதென்று சிலுவையில் நிரூபித்துக் காட்டினார். இயேசு சென்ற இடத்திற்கு பாதை அன்பு மட்டும். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.

ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ள தேவையானது அன்பே. (லூக்கா 19:35-40) இத்தகைய சிறந்த அன்பை நம்மை அன்பு செய்பவர்களுக்கு மட்டும் வழங்குவது இயல்பானது. அதை அனைவரும் செய்யலாம். ஆனால் இயேசு கூறுவது பகைவரையும் அன்பு செய்யுங்கள். (மத் 5:44) இது சாதாரண மனிதனுக்கு மிக கடினமானது. ஆனால் நற்செய்திப் பணியாளர்கள் இதில் முயன்று வெற்றி பெறலாம்.

வெறும் வார்த்தைகளால மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் செயலில் காட்டுவோம் (1 யோவா 3:18) மற்றவருக்காக நடிப்பதாக இல்லாமல் உண்மையான அன்பை வெளிப்படுத்துவோம். அது நமக்கு நன்மையைப் பெற்றுத் தரும் (உரோ 12:9) விவிலியத்தின் மையச் செய்தி அன்பு. உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கடவுளின் அன்பை அனுபவித்து, அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும். "நாம் அன்பில்லாமல் இருந்தால், எதுவும் இல்லாதவர்களாய் இருப்போம்" (1 கொரி 13:2).

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்

## என் களப்பணி

என் வாழ்க்கையில் எதற்கு இந்தக் களப்பணி. பாதையில்லா பாலைவனத்தில் பாதை அமைக்க வழியில்லா செங்கடலில் வழியைத் திறந்தீர். இப்படியெல்லாம் நீர் செய்த அதிசயங்களையும் அற்புதங்களையும் இறைவார்த்தை மூலம் வாசித்த எனக்கு என் வாழ்விலும் அதிசயமாய் அற்புதம் செய்தீரே தகப்பனே நன்றி.

எனது குடும்பம், எனது இல்லம், எனது உறவு, எனது பணி என்று சுயநல வாழ்க்கை வாழ்ந்த என்மேல் அப்படி என்ன என்மீது உமக்கு அன்பு? என் வாழ்க்கை வெற்று காலியிடமாய்த்தான் இருக்கிறது என்ற மனநிலையில் இருந்த எனக்கு ஏன இந்த களப்பணி? புரியவில்லையே. வேடிக்கையான பணி என்று நினைத்து ஆரம்பித்தேன். மனிதன் என்ற நிலையில் துன்பம், வேதனை, கஷ்டம், பலவிதமான வலிகள். இப்படியொரு பாலைவனத்தில் பணியா? கஷ்டப்பட்டேன். அந்த கஷ்டத்திலும் ஒவ்வொரு இல்லத்திலும் புதியதொரு ஆன்மாவை பார்த்தேன். அந்த ஆன்மாவில் என் இயேசுவைக் கண்டுகொண்டேன். அப்போதுதான் புரிந்தது. நான் வாழ்வது கானன் நாடு என்றும், ஏழு நாள்களில் என் இயேசுவின் நிறைவைக் கண்டு மகிழ்ந்தேன். பாலைவனத்தில் இயேசு என்னும் பூந்தோட்டம் பூத்து மலர்ந்தை கண்டு மெய் சிலிர்த்து போனேன்.

ஒரு சகோதரனை சந்தித்தபோது அவருடைய ஆன்மாவில் இயேசுவின் முள்முடியை கண்ணீர் வழியாகப் பார்த்தேன். உள்ளம் குத்தப்பட்டேன். பலவிதமமான கோர முகங்களை சந்தித்தேன். அதில் என் இயேசுவின் இரத்த வாடையை உணர்ந்தேன். அப்போது இயேசுவிடம் நொந்து அழுதேன். இயேசு அவரோடு பேசினார். விடுதலை அளித்தார். குணமளித்தார்.

இப்படியெல்லாம் என் இயேசுவை பார்க்கத்தான் இந்த தவக்காலக் களப்பணி, என்பதை உணர்ந்தேன். கலப்பையில் கை வைத்தவன் திரும்பி பார்க்க கூடாது என்ற வார்த்தையின்படி வாழ இயேசுவின் - பாடுகளின் துன்ப துயரங்களை நேரில் கண்டு விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் வேரூன்றி நிற்க களப்பணி வழியாக எனக்கு வாய்ப்பு அளித்த பணிக் குழுவிற்கு நன்றி.

நற்பணி S. **லூவனா செபஸ்தியான்,** தங்கச்சிமடம்.

உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என கண்களைத் திறந்தருளும் (திப 119:18) .

நாம் காலையில் எழுந்தவுடன் கண்களைக் கசக்குகிறோம். பின்பு கண்களைத் திறந்து பார்க்கிறோம். எந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று பார்த்துப் பார்த்து அந்தந்த வேலைகளைச் செய்கிறோம். சிலவற்றை மிகவும் கூர்ந்து பார்த்து செய்கிறோம். இவ்வாறு செய்வதற்கான ஆற்றலை நம் உடலிலிருந்தே பெறுகிறோம். ஆனால் தாவீது உம் திருச்சட்டத்தில் உள்ள வியப்பானவற்றை நான் கண்டு உணருமாறு என் கண்களைத் திறந்தருளும் என்று மிகவும் ஆழமான அவசியமான ஒரு வேண்டுதலைச் செய்கிறார் (திபா 119:18). இந்த இறைவேண்டல் வழியாக நாம் என்ன புரிந்து கொள்கிறோம்? நம் உடலில் உள்ள கண்களால் எல்லாவவற்றையும் பார்க்கிறோம். நம் மனக்கண்களால் எல்லாவவற்றையும் உணருகிறோம். பார்ப்பது வேறு மனக் கண்களால் காண்பது வேறு. இன்று நம்மில் அநேகர் வெளியில் உள்ள அடையாளங்களைப் பார்ப்பதிலேயே மன நிறைவு அடைகிறோம். மனக் கண்கள் திறக்கப்பட்டு கடவுளின் வியப்புக்குரிய செயல்களைக் காண விருப்பம் கொள்வதில்லை. தொடக்க கால சீடர்களின் அனுபவம் என்ன? தொடக்க முதல் இருந்த வாழ்வளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம். கண்ணால் கண்டோம். நாங்கள் கண்டதை நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்று முழக்கமிட்டுக் கூறினார்கள் (1 யோ 1:1-4). கத்தோலிக்க திரு அவையின் கோட்பாடுகளைச் சொல்லிக் கொண்டு பெருமைப்படுகிறோம். அதற்குள் மறைந்து கிடக்கின்ற கடவுளின் வியத்தகு செயல்களை அடிப்படை உண்மைகளை நாம் ஆராய்ந்து அறிய முடியாதவாறு வெளி அடையாளங்களால் நம் மனக் கண்கள் குருடாகிக் கிடக்கின்றன (2 கொ 4:4). திருச்சட்டத்தில் வியப்பானவை எவை? கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளிதான் அது. விவிலியம் முழுவதும் அதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. அவர் கட்புலனாத கடவுளது சாயல்.

(கொலோ 1:16) தம் முழு நிறைவும் அவருள் குடிகொள்ள கடவுள் திருவுளம் கொண்டார் (கொலோ 1:19). ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன (கொலோ 2:3). அழைக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார் (1 கொ 1:24). விண்ணகம் சார்ந்த ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம்மீது பொழிந்துள்ளார் (எபே 1:3). இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்பு பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை (திப 4:12). நம் விண்ணகத் தந்தையின் முழு நிறைவும் அவரது வியத்தகு செயல்களும் நம் ஆண்டவருக்குள் மறைந்திருக்கிறது. இவரை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும்போது கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அவர் நமக்கு அளிக்கிறார் (யோ 1:12). நாம் கடவுளின் பிள்ளைகள் ஆனபின்பு அதை உணராமல் எப்போதும் பாவி பாவி என்று அறிக்கை செய்து கொண்டே இருந்தால் அவர் நம்மைப் பார்த்து “இருக்கிறவர் நானே” என்பதை நீங்கள் நம்பாவிடில் நீங்கள் பாவிகளாய் சாவீர்கள் என்றார் (யோ 8:24). அவருடைய சீடர்கள்

ஆண்டவரைப் பார்த்து தந்தையை எங்களுக்குக் காட்டும். அதுவே போதும் என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவர் மறுமொழியாக இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் என்றார் (யோ 14:7-11). இது எவ்வளவு ஆழமாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய பகுதி என்பதை உணர்வோம். நம்முடைய மனக்கண் கண்கள் திறக்கப்பட்டால் மட்டுமே அவரது வியத்தகு செயல்களை நாம் புரிந்து கொள்ள இயலும்.
எனவேதான் புனித பவுல் நமது சமயத்தின் மறை உண்மை உயர்வானது என்பதில் ஐயமேயில்லை. மானிடராய் அவர் வெளிப்படுத்தப்பட்டார். தூய ஆவியானவரால் நேர்மையாளர் என மெய்ப்பிக்கப்பட்டார். வானதூதருக்குத் தோன்றினார். பிற இனத்தாருக்குப் பறைசாற்றப்பட்டார். உலகினரால் நம்பிக்கையோடு ஏற்கப்பட்டார். மாட்சியோடு விண்ணேற்றமடைந்தார் என்று விளக்குகிறார் (1 திமொ 3:16). திருச்சட்டத்தில் மறைந்து கிடக்கின்ற கடவுளின் வியத்தகு செயல்களை அவர் புரிந்து கொண்டதால்தான் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே. நான் பெறும் ஒப்பற்ற செல்வம் என்று தனது உள்ளத்தின் உணர்வை வெளிப்படுத்துகிறார் (பிலி 3:8). மேலும் கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது. அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானது. அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை. அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை என விளக்குகிறார் (உரோ 11:33). இவை அனைத்தும் நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பிலும் அவரது வல்ல செயல்களிலும் அவரது சிலுவைப் பாடுகளிலும் அவரது இறப்பிலும் அவரது உயிர்ப்பிலும் வெளிப்பட்டது. எனவேதான பேதுரு கடவுளையும் நம் ஆண்டவராகிய இயேசுவையும் அறிந்து கொள்வதன் மூலம் இறைப்பற்றுடன் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் தம் இறைவல்லவமையால் நமக்கு அருளியுள்ளார் என்று குறிப்பிடுகிறார் (2 பேது 1:2-3) பழைய ஏற்பாட்டு காலத்தில் எலிசாவை பிடித்து வரும்படி சிரியாவின் அரசன் பெரும்படைகளை அனுப்பினார். அதைக் கண்டு எலிசாவின் வேலைக்காரன் அஞ்சி நடுங்கினான். அதற்கு எலிசா நீ அஞ்ச வேண்டாம். அவர்களோடு இருப்பவர்களைவிட நம்மோடு இருப்பவர்கள் அதிகம் என்றார். பின்பு எலிசா ஆண்டவரே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்று வேண்டினார். அவ்விதமே ஆண்டவர் வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். இதோ மலை எங்கனும் நெருப்புக் குதிரைகளும் தேர்களும் எலிசாவைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டான் (2 அர 6:13-17). இங்கே வேலைக்காரனின் மனக்கண்கள் திறக்கப்பட்டதால் ஆண்டவரின் வியத்தகு செயலைக் கண்டான். புதிய ஏற்பாட்டில் புனித யோவான் உங்களுள் இருப்பவர் உலகில் இருக்கும் அந்த எதிர்க் கிறிஸ்துவைவிடப் பெரியவர் என்று குறிப்பிடுகிறா (1 யோ 4:4). எனவே தந்தையாம் கடவுளின் அனைத்து வியத்தகு செயல்களும் நம் ஆண்டவரில்தான் மறைந்திருக்கிறது என்பதை உணர்ந்து ஒவ்வொரு நாளும் அவரை அறிகிற அறிவில் வளர்வோம். தாவீதைப் போல உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டு உணருமாறு என் கண்களைத் திறந்தருளும் என்று நாள்தோறும் தூய ஆவியானவரின் துணை கொண்டு வேண்டுதல் செய்வோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



முடிவுறாத பேரன்பு கொண்டவரே இறைவா! (புல 3:22)

தவக்காலத்தில் நீர் விரும்பாத முறைமைகளைச் செய்து திருப்திப் பட்டுக்கொண்டிருந்த (எசா 58:6) எனக்கு உம்மை அறியும் அறிவைக்(ஓசே 6:6) கற்றுத்தந்து, உம் தாகம் எது என்பதை அறிந்திடவும் (யோ 19:28) உம் சிலுவையே விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லும் ஏணி (மத் 16:24) என்பதைப் புரிந்து துன்பம் ஏற்கவும், உம் வார்த்தைகள் என் உள்ளத்தை த் துளைத்து உம் வெளிப்பாடுகளையும், திட்டங்களையும் (உரோ 12:2) உணர்த்திடவும் வேண்டிய ஆற்றலைத் தர வேண்டும் என்று மன்றாடுகிறேன்.

## இது சாத்தியமா ?

தவக்கால இல்ல சந்திப்பின்போது ஒரு குடும்பத் தலைவியோடு நடந்த உரையாடலில், அவரது கோயிலுக்கு செல்லும் பழக்கம் பற்றி கேட்டபோது இவ்வாறு பதில் வந்தது: தம்பி, நான் கோயிலுக்கு செல்லும்போது திருப்பலி தொடங்குவதற்கு குறைந்தபட்சம் ஐந்து நிமிடத்திற்கு முன்னதாக சென்று விட வேண்டும் என்ற கொள்கையில் மிக உறுதியாய் உள்ளேன். அதிலும் முன் வரிசையில் சென்று அமர்ந்து விடுவேன். அதற்கான காரணத்தை அவர் சொன்னது தான் இன்னும் ஆனந்த அதிர்ச்சி! 'பின்புறம் ஆலயத்தில் இருக்கும் போது எனக்கு முன்னாடி உள்ள பெண்கள், என்னென்ன ஆடை அணிந்திருக்கின்றனர், என்னென்ன நகை போட்டிருக்கின்றனர் என்று மனம் ஆய்வு செய்ய தொடங்கி விடும். கடவுளுக்கு முதலிடம் கொடுக்க முடியாதே!' என்றாரே பார்க்கணும்!

அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்கு சேர்த்து கொடுக்கப்படும் (மத் 6:33) என்ற இறைவார்த்தை நம் உள்ளத்தில் இருத்தப்படும் போது, இது போன்ற ஆக்கபூர்வமான செயல்பாடுகள் நம் வாழ்விலும் சாத்தியம் தானே!

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## தவக்கால களப்பணித் திறனாய்வு

நாள் : ஏப்ரல் 11 & 12, 2025, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை

இடம் : அமைதியகம்

தலைமை : மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம்**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

முன்னிலை : அருள்பணி. **ச.செபஸ்டின்**
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்,
வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை

- அணித் தலைவர்களும் அவரோடு இணைந்து பணியாற்றிய குறைந்தது இரண்டு பணியாளர்கள் பங்குகொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
- வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணிக்குள் அமைதியகம் வந்து சேரவேண்டும்.

நாதாப் என்ற நற்செய்திப் பணியாளரைக் கடவுள் அழைத்தார் 'உன்னைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யப் போகிறேன். ஆகையால், 'யூனர்டோக்' என்ற தீவுக்கு நீ நற்செய்திப் பணி செய்யப் போ' என்றார். கடவுளின் வார்த்தைக்குப் பணிந்து பணியாளர் சென்றார். பல நாள்கள் ஆகியும் ஒருவரும் அவருடைய வார்த்தையை ஏற்கவில்லை. சோர்ந்துபோன நாதாப் கண்ணீரோடு செபித்தார். அப்பொழுது கடவுள் 'நீ என்னை நம்பாமல், தீவிலிருந்துத் திரும்பிச் செல்வதற்காக உன் படகை கரையிலேயே கட்டி வைத்திருக்கிறாய். அதை முதலில் அவிழ்த்து விடு' என்று சொன்னார். நாதாப் இறை நம்பிக்கையோடு படகை அவிழ்த்துவிட்டார். அதன்பிறகு தீவே இறைவார்த்தைகளைக் கேட்டு மனம்மாறி மீட்படைந்தது. ஆகவே, நம்பிக்கையோடு பணி செய். கடவுளின் மாட்சியைக் காண்பாய் (யோவா 11:40).

**முடியாது என்று சொன்ன மோசே:**

> கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள் மேல் தங்கும் (1 பேது 4:14)

கடவுள் எரியும் முட்புதரில் தோன்றி மோசேயை அழைத்தார். மோசே தனது திக்குவாயையும் இயலாமையும் முன்வைத்து முடியாது என்று விலகப் பார்த்தார். அப்பொழுது கடவுள் கோபம் கொண்டார். கடவுளால் இயலாமலா? அவரை இறைபணிக்கு அழைத்தார். மோசே முடியாது என்றவுடன் ஆரோனைத் துணைக்கு அனுப்புவேன் என்று வாக்கு கொடுத்தார். வாய்ப்பை நழுவ விடும்போது அது இன்னொருவருக்கு கைமாறுகிறது. மோசேயுடைய கோலையையும் அதிசயம் செய்யும்படி பயன்படுத்தினார். அவரால் முடியாதது எதுவுமில்லை. ஆகையால், வாய்ப்பை பயன்படுத்திக்கொள். உன் இயலாமையை எண்ணி இறைபணியைச் செய்யாது விலகி விடாதே தொடர்ந்து பணிசெய். கடவுளின் மாட்சியைக் காண்பாய்.

**ஊரைவிட்டு ஓடிப்போன யோனா.**

முடியாது என்று சொல்லி யோனா கப்பலேறி ஊரைவிட்டே ஓடிப்போனார். நடந்தது என்ன? யோனா கடலிலே வீசப்பட்டார். குறித்த நேரத்தில் கொந்தளிக்கும் கடலிலே தத்தளித்த யோனாவை தூக்கிச் செல்லும் ஊர்தியாக மீன் மாறியது. மனிதனைவிட அறிவு குறைந்த மீன் இறைத்திட்டத்திற்கு தன்னை முழுவதும் அர்பணித்து மூன்று நாள்கள் உணவின்றி உறக்கமின்றி கடவுள் சொன்னதை கவனமுடன் நிறைவேற்றியது. இறைத்திட்டத்திற்கு மாறாக மீன் ஒரு நிமிடம் தாமதமாக வந்திருந்தாலும் யோனா அமிழ்ந்து போயிருப்பார். அதைவிட 120000 க்கு அதிகமான நினிவே நகர மக்களும் பாவத்தால் அழிந்து போயிருப்பார்கள். கடவுளின் கட்டளைப்படி தர்சீசுக்கு எதிர்திசையிலுள்ள யோப்பாவை நோக்கிச் சென்று யோனாவை கரையில் கக்கியது (யோனா 2:10). மீன் கரைக்கு வந்தால் மீனுக்கு ஆபத்து. யோனவை தண்ணீரில் கக்கினால் யோனாவுக்கு ஆபத்து. இங்கே, யோனாவை மீன் கரையில் கக்கியதாக திருவிவிலியம் கூறுகிறது. மீனுக்கு எத்தனை சிரமங்கள் சிராய்ப்புகள் ஏற்பட்டிருக்கும். இதுபோல அழைக்கப்பட்ட உனக்கும் துன்பங்களும் துயரங்களும் உண்டு. ஆனாலும், உன்னை அது ஒன்றும்

செய்யமுடியாது. ஆகவே, துணிந்து பணி செய், கடவுளின் மாட்சியைக் காண்பாய்.

**தெரியாது என்று சொன்ன பேதுரு.**

மீன் பிடித்துக்கொண்டிருந்த பேதுருவை அழைக்கும் வேளையில் 'ஆண்டவரே நான் பாவி நீர் என்னைவிட்டுப் போய்விடும்' என்றார். இயேசு பேதுருவை நோக்கி 'அஞ்சாதே, இது முதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்' என்றார். அதுமுதல் இயேசுவோடு பயணித்த பேதுரு 'யார் உம்மை விட்டுப் போனாலும் நான் உம்மோடு இருப்பேன் உமக்காக உயிரையும் கொடுப்பேன்' என்று அறிக்கையிட்டார். ஆனால், ஒரு சமயத்தில் இயேசுவை தெரியாது என்று மறுதலித்துவிட்டார். ஆனாலும், அழைத்தவர் உண்மையுள்ளவர். ஆகவே, பேதுருவையே திருஅவைக்கு தலைவராக்கி, தம் பணிக்கெனப் பயன்படுத்தினார். அவர் நிழலும்கூட அற்புதம் செய்யும்படி ஆண்டவர் அவரை வல்லமையாகப் பயன்படுத்தினார். ஆகவே, உன் இயலாமையை எண்ணி விலகிக்கொள்ள நினைக்காதே. உன்னுடைய இயலாமையில்தான் ஆண்டவர் வல்லமை வெளிப்படும். ஆகவே தொடர்ந்து பணி செய், கடவுளின் மாட்சியைக் காண்பாய்.

நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய். ( யோவா 11:40)

**எதிராக செயல்பட்ட பவுல்**

இறைதிட்டத்திற்கு மாறாக செயல்பட்டுக்கொண்டிருந்த பவுல் இயேசுவால் சந்திக்கப்பட்ட பின் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு! என்று சொல்லி தன்னை முழுவதும் இறைதிட்டத்திற்குக்கென அர்பணித்துக்கொண்டார். இயேசுவை ஆதாயமாக்கிக் கொள்ள அனைத்தையும் குப்பை எனக் கருதினார். வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய ஆற்றல் உண்டு என்பதை அறிந்து கொண்டார். ஆகையால், கடவுள் அவரை பிற இனத்தார்க்கு நற்செய்தியை அறிவிக்கும் கருவியாகப் பயன்படுத்தினார். பவுல் செல்ல முடியாத இடங்களில் அவர் கைக்குட்டையைக் கொண்டும் ஆண்டவர் அற்புதம் செய்தார். தன்னை அழைத்தவரின் மனநிலையைப் புரிந்து கொண்ட பவுல், நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என ஓட்டத்தை முடித்துவிட்டேன் (2திமோ4:7) என்று சொல்லி இறை திருவுளம் நிறைவேற்றினார். ஆகவே, இறை திருவுளம் என்ன என்று எனக்கு புரியவில்லையே! என்று விலகிக் கொள்ள நினைக்காதே! ஆண்டவரின் ஒளி உன்மீதும் ஒளிரும். ஆகவே, தொடர்ந்து பணி செய், கடவுளின் மாட்சியைக் காண்பாய்.

கல்வி அறிவு இல்லாத திருத்தூதர்களை இறைவன் வல்லமையாகப் பயன்படுத்தவில்லையா?. சமாரியாப் பெண்ணை நினைத்து துணிவு கொள். நீ எந்த நிலையில் இருந்தாலும் உன்னை அவர் பயன்படுத்த முடியும். ஆகவே, தகுதியற்றவன் என்று நீ முடிவு செய்யாதே! இறைபணிக்குத் தேவை மனித ஞானம் அல்ல, கடவுளின் வல்லமையே (1கொரி 2:5) என்பதை அறிந்து கொள். ஆகவே, உன் பெற்றோரையோ, உன் பிள்ளைகளையோ, உன் உடல் நலக் குறைவையோ, உன் வேலையையோ காரணம் காட்டி முடியாது என்று நீ சொல்லி விடாதே!.

பவுலுக்கு உடலில் ஒரு முள் (2கொரி 12:7) திமோதேவுக்கு தீராக வயிற்றுநோய் (1தெச 5:3) சாகும் நிலைக்கு சென்ற தீத்து (பிலி 2:27). இப்படிப்பட்ட இவர்கள் எல்லாம் இறைபணியை தொடர்ந்து செய்து கொண்டுதான் இருந்தார்கள். முடியாது என்று முடங்கிவிடவில்லையே!. உன்னுடைய இயலாமையில்தான் கடவுளின் வல்லமை வெளிப்படும் என்பதை புரிந்து கொள். உன் இயல்பும் இயலாமையும் அவருக்குத் தெரியும். ஆனாலும், இறைத்திட்டத்தை உன்னோடு இணைந்து நிறைவேற்றவே விரும்புகிறார். இறைத்திட்டத்தை நிறைவேற்ற கடவுள் மனிதர்களை மட்டுமல்ல மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள், கடல்மீன்கள் அனைத்தையும் அவர் பணிக்கு பயன்படுத்தியிருக்கிறார் என்றால், உன்னை அவர் பயன்படுத்த மாட்டாரா? அவரால் எல்லாம் கூடும். ஆகையால், வல்லமையோடு செயல்படும் ஆண்டவர் உன்னை அவர் விரும்பும் பாத்திரமாக பயன்படுத்த முடியும். உன் வாழ்க்கை பயணத்தில் நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முன்பாக ஆண்டவர் முன்செல்கின்றார் என்பதை மறந்துபோகதே! ஏனெனில் கடவுள் உன்னை விலைகொடுத்து மீட்டுள்ளார் (1கொரி 6:19,20). ஆகவே, முடியாது என்று நீ முடிவு செய்யாதே! அனைத்தையும் செய்ய வல்லவர் நம் ஆண்டவர். உலக அழிவிலிருந்து உன்னைக் காத்து உன்னத மகிமையில் பங்குகொள்ளச் செய்யவே அழைக்கிறார் (2 பேது 1:4) . வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வழ்கிறார் (கலா 2:20) என்ற மனநிலையில் உன்னுள் செயலாற்றுகின்ற இறைவனின் ஆற்றலைப் புரிந்து இறைபணியை தொடர்ந்து முழுமையாய்ச் செய். கடவுளின் மாட்சியைக் காண்பாய். இறைஅருள் உனக்குப் போதும். உனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. ஆமென்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## நற்கருணை — நிலைவாழ்வின் உறைவிடம்

இறைவனின் அளவற்ற அன்பையும் இரக்கத்தையும் நலனையும் பெற்று இறை வாழ்வை நோக்கி நாம் பயணிக்க நற்கருணை நம்பிக்கையாளர்களுக்குத் தகுதி வழங்குகிறது. அளவற்ற ஆற்றலின், இரக்கத்தின் உறைவிடம் நற்கருணையாகும்.

இது வற்றாத நிலை வாழ்வின் நீரூற்று ஆகும். நாம் அனைவரும் விரும்பும் நிலைவாழ்வை நமக்குத தருகின்ற இறை உணவு. "இது நமது முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல அதை உண்டவர்கள் இறந்து போனார்கள் இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்" (யோவா 6:58)

பாவத்தில் விழாமல் மக்களைக் காப்பாற்ற மன்னாவால் இயலவில்லை. ஆனால் இறப்பிலிருந்தும் பாவத்திலிருந்தும் நற்கருணை மீட்கிறது.

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே" என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் (யோவா 11:25-26)

## 1. நிலை வாழ்வின் அப்பம்.

இயேசு "விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்று வெளிப்படுத்துகிறார் (யோவா 6:51).

## 2. மீட்பே நற்கருணை

உடல் உள்ளம் ஆன்மா ஆகிய மூன்றிற்கும் நிறை வாழ்வும் நலமும் நல்க இறைவனால் அருளப்பட்டதே நற்கருணை. தூய கொடைகளைத் தந்து மனிதனது ஆளுமையை நிறைவடையச் செய்யும் உணவு நற்கருணை. "எனது சதை உண்மையான உணவு எனது இரத்தம் உண்மையான பானம் (யோவா 6:55). அது நம்மை தூய்மைப்படுத்தி நமது ஆன்மாவையும் உயிரையும் உடலையும் ஒரு குற்றமின்றி பாதுகாக்கும்.

"தாகமாய் இருப்பவனுக்கு வாழ்வளிக்கும் நீரூற்றே நற்கருணை. எல்லாம் நிறைவேறிவிட்டது அகரமும் னகரமும் நானே தொடக்கமும் முடிவும் நானே தாகமாய் இருப்போருக்கு வாழ்வு அளிக்கும் நீரூற்றிலிருந்து நான் இலவசமாய்க் குடிக்கக் கொடுப்பேன் (திவெ 21:6).

மனிதரோடு இறைவன் உறைவதே நற்கருணை. "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்து இருப்பேன் (யோவா 6:56).

## 3. ஒருடலாக்கும் உணவே நற்கருணை

நற்கருணை கொண்டாட்டத்தில் பங்கேற்க்கும்போது நாம் ஒருடலாகிறோம் (1 கொரி 10:16-17)

அப்பமும் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம்." (1 கொரி 10:17)

## 4. ஆண்டவரின் மாபெரும் விருந்து (எசா 25:6-8)

"படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார். அதில் சுவைமிக்க பண்டங்களம், பழரசப் பானமும் கொழுப்பான இறைச்சித் துண்களும் வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசமும் பரிமாறப்படும். என்றுமே இலாதவாறு சாவை ஒழித்து விடுவார். என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார். தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றி விடுவார் (எசா 25:6-8). ஆண்டவரே நமக்கு வழங்கும் விருந்தாம் நற்கருணையை பெற நம்மை தகுதியாக்குவோம்.

இத்தகைய விருந்தை வழங்கும் திருப்பலியில் நாமும் பங்கேற்போம். மற்றவர்களையும் பங்கேற்கத் தூண்டுவோம்.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

# உயிர்ப்பை அனுபவிக்கும் எதிர்நோக்கு

(யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

'இயேசு உயிர்த்தாரா' என்ற ஒரு நாடகம் ... அதில் இயேசு உயிர்க்கவில்லை. அதனால் அவர் உயிர்த்து விட்டார் என்று மக்களிடையே அறிவிக்கக் கூடாது என்று யூத சமயத் தலைவர்கள் வழக்கு தொடர அவர்கள் பக்கம் பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர்கள் என்று ஒரு பெருங்கூட்டமே அவர்களின் கருத்தை உயர்த்திப் பிடித்து நின்றது. இயேசு உயிர்த்துவிட்டார் என்று சொல்ல இயேசுவின் சீடர்கள் மட்டுமே நின்றார்கள்.

நீதிபதி இருபக்கமும் ஆதாரத்தை கேட்க யூத தலைவர்கள் இயேசு உயிர்க்கவில்லை என்பதற்கு அவரின் கல்லறைக்கு காவலாக இருந்தவர்களைக் கூட்டி வந்து மிகுதியான பணத்தைக் கொடுத்து 'நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்று விட்டனர்' (மத் 28:13) என்று பொய்சாட்சியம் கூற வைத்தனர். அவர்கள் பக்க சாட்சியங்கள் வலுவானதாக இருந்தது.

சீடர்களும் உயிர்த்த இயேசு காட்சியளித்ததை விவரித்தனர். அவரின் காயங்களைத் தங்களிடம் காண்பித்ததையும் தங்களோடு பேசியதையும் தங்களை ஆசீர்வதித்ததையும் தங்களிடம் உணவு வாங்கி உண்டதையும் எடுத்துரைத்தனர்.

மகதலா மரியா தனது சாட்சியத்தை பதிவு செய்ய நீதிமன்றத்திற்கு வந்தார். வெற்று கல்லறையாகக் காணப்பட்ட கல்லறைத் தோட்டத்தில் அழுது கொண்டிருந்த தம்மை 'அம்மா ஏன் அழுகிறீர்' என்று வானதூதர்கள் கேட்டதையும் அதன் பின் 'ஏனம்மா அழுகிறாய் ? யாரைத் தேடுகிறாய்?' என்று கேட்டவரை தோட்டக்காரரோ என்று நினைத்து இயேசுவிடமே 'ஐயா நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும் நான் அவரை எடுத்துச் செல்வேன்' என்று அவரிடமே கேட்டு அவர் 'மரியா' என்று பெயர் சொல்லி அழைக்க தான் அவரின் காலடிகளைப் பற்றிக் கொண்டதையும் மகதலா மரியா விளக்கிக் கூற எதிர்தரப்பு வக்கீல் 'அவர் உயிர்த்ததைப் பார்த்தாயா ?' என்று குறுக்கு விசாரணை செய்தார்.

எம்மாவு சீடர்களும் தாங்கள் இயேசுவின் பாடுகள் மரணம் மற்றும் உயிர்த்த செய்தியைப் பற்றி பேசிக் கொண்டு ஊருக்கு சென்று கொண்டிருந்த போது ஒரு வழிப்போக்கரைப் போல் இயேசு தங்களோடு நடந்து கொண்டே மெசியாவின் மரணம், உயிர்ப்பு பற்றிய மறைநூல் வார்த்தைகளை எடுத்துச் சொல்லி விளக்கிக் கொண்டு வந்ததையும், பின் தங்களோடு பந்தியில் அமர்ந்து அப்பம் பிட்ட போது அவர் இயேசு தான் என்று தாங்கள் கண்டு கொண்டதையும்' (லூக் 13:32) விவரிக்க மீண்டும் எதிர்தரப்பு ( சதுசேய )வக்கீல் அவர்களை குறுக்கு விசாரணை செய்து கேள்வி மேல் கேள்வி கேட்டார்.

'நீங்கள் நம்புகிற இயேசு நயின் ஊர் கைம்பெண்ணின் இறந்து போன மகனுக்கு உயிர் தந்ததை அனைவரும் பார்த்தார்கள் அல்லவா?' 'அது போல இலாசர் உயிர்பெற்று வந்த போதும் ஒரு பெருங்கூட்டமே அதைப் பார்த்துக் கொண்டிருந்ததே!

ஏன் நூற்றுவர் தலைவரின் இறந்து போன மகள் உயிரோடு எழுந்ததை அந்த வீட்டிலிருந்தவர்கள் பார்த்தார்கள் அல்லவா! அது போல இயேசு உயிர் பெற்று எழுந்த போது அதைப் பார்த்த சாட்சிகள் உண்டா? என்ன முகாந்திரம் இருக்கிறது?

எப்படி எங்களால் நம்ப முடியும்? சான்றுகள் இருந்தால் தானே சட்டப்படி அதை ஏற்றுக்கொள்ள முடியும்? உயிர்த்த இயேசுவை அங்கே கண்டோம் இங்கே கண்டோம் என்று வாய் வார்த்தையாய் சொல்வது சட்டப்படி செல்லாது என்பது உங்களுக்குத் தெரியாதா?' என்று வக்கீல் வாதாட ... இந்த வழக்கு எப்படி முடியப்போகிறது? என்ன தீர்ப்பை நீதிபதி வழங்குவார்? என்று அனைவரும் ஆவலாய் படபடப்புடன் பார்த்துக் கொண்டிருக்க நீதிபதி, 'இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. நாளை தீர்ப்பு வழங்கப்படும்' என்று கூறி எழுந்து செல்ல சதுசேய, பரிசேயக்கூட்டமும், யூதத்தலைவர்களின் கூட்டமும், இயேசுவின் அன்புச் சீடர்களும், பார்வையாளர்களும் கலைந்து சென்றனர்.

மறுநாள் நீதிமன்றம் கூட யூத தலைவர்களும், சதுசேயர் பரிசேயரும், மறைநூல் அறிஞர்களும் ஒருவித பதட்டத்தோடு இருக்கையின் நுனியில் அமர்ந்திருக்க இயேசுவின் சீடர்கள் அங்கே அமைதியாய் அமர்ந்திருந்தனர்.

நீதிபதி தமது இருக்கையில் அமர்ந்து இரு தரப்பினரையும் ஒரு பொதுவான பார்வை பார்த்து விட்டு குரலை உயர்த்தி பேச ஆரம்பித்தார்.

இயேசு உயிர்த்தாரா? என்பதுதான் வழக்கின் சாராம்சம். யூத தலைவர்கள் தொடுத்த இந்த வழக்கில் அவர்களின் வழக்கறிஞர்கள் மிக திறமையாக வாதாடினார்கள். தங்கள் பக்க நியாயத்தை நீதிமன்றத்தில் எடுத்து வைத்தனர். சாட்சிகளை குறுக்கு விசாரணைகள் செய்தார்கள். அவர்களின் வாதத்தை வைத்துப் பார்க்கும் போது இயேசு உயிர்க்கவில்லை என்று தீர்ப்பு சொல்வது தான் சரியாக இருக்கும். ஆனாலும்....

இயேசு உயிர்த்துவிட்டார் என்று சொல்லிக் கொண்டு வந்து பேசியவர்களின் முகத் தெளிவை, மனத்தெளிவை வேறு யாரிடமும் நான் பார்க்கவில்லை. அவர்களின் தீர்க்கமான பேச்சை வேறு யாரிடமும் நான் பார்க்கவில்லை. அவர்களின் மகிழ்ச்சியை வேறு யாரிடமும் நான் பார்க்கவில்லை. இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது இயேசு உயிர்த்தாரா இல்லையா என்று ஆராய்வதை விட இயேசுவின் உயிர்ப்பின் அனுபவத்தை வாழுகின்ற ஒரு குழு இருக்கிறார்கள்.

(கூட்டம் மூச்சுவிட மறந்து கேட்டுக் கொண்டிருந்தது) அதனால் இயேசு உயிர்த்துவிட்டார் என்று தீர்ப்பிட மாட்டேன். ஆனால், உயிர்க்கவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று தீர்ப்பு வழங்கினார்.

உலகம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து ஒன்றை சொன்னாலும் உயிர்த்த இயேசுவைக் கண்டதால் கிடைத்த அந்த உயர்ந்த அனுபவம் இயேசுவின் சீடர்களை மீட்பின் அனுபவத்திற்குள் கொண்டு சென்றது. இறைவனின் மீட்புப் பணியை உயிரோட்டமுள்ளதாக்கியது. அனைத்துமே ஆண்டவர்தான் என்று அவரையே பற்றிக் கொண்டது. அவரை மட்டுமே சார்ந்து நின்றது. 'தான்' மறைந்து இயேசுவை மட்டுமே உயர்த்திப் பிடித்தது.

ஆண்டவரின் உயிர்ப்பை நாம் வருடந்தோறும் கொண்டாடுகிறோம். ஆனால் அனுபவிக்கிறோமா? என்பதை திருத்தூதர்களின் அனுபவங்களிலிருந்து உள்நோக்கிப் பார்த்து தெரிந்து, தெளிந்து கொள்வோம்.

**சீடர்களின் உயிர்ப்பு அனுபவம்:**

இயேசுவிடத்தில் அதீத அன்பு இருந்த போதிலும் அவர் தம் ஏற்கப் போகும் பாடுகள் மரணம் உயிர்ப்பு பற்றி பேசிக் கொண்டிருப்பார் சீடர்களோ, அப்பம் கொண்டு

வரலையே என்று கவலைப்பட்டுக் கொண்டும், யார் பெரியவர் என்று வாதிட்டுக் கொண்டும் இருப்பார்கள். எதிலும் அவசரம், நம்பிக்கைக் குறைவு, கோபத்தை வெளிப்படுத்துவதில் வேகம், பதவி மோகம், ஆர்வக்கோளாறு, இயேசுவின் கெத்சமெனி அனுபவத்திலும், உருமாற்ற நிகழ்விலும் கூட அப்படி ஒரு தூக்கம், இயேசு பிடிபட்ட நிலையில் அனைவரும் அவரை விட்டு ஓடிப் போய் விட்ட நிலை, இயேசு சித்ரவதைகளை அனுபவித்துக் கொண்டிருந்த போது கூட குளிர்காய்ந்து கொண்டிருந்த விதம், அவரை மறுதலித்த வேகம் என்று சீடர்களில் வெளிப்பட்ட பற்றுறுதியின்மை, நம்பிக்கையின்மை எல்லாம் எங்கே போனது? அவர்களா இவர்கள் என்று வினா எழுப்பும் வண்ணம் ஒரு மகா பெரிய மாற்றம் ஏற்பட்டது எப்படி? இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையால் கிடைத்த அனுபவம் அவர்களிலில் இருந்து அவர்களைப் பிரித்தெடுத்தது.

தாங்கள் யார்? எதற்காக இயேசுவால் அழைக்கப்பட்டோம்? நமது பணியின் நோக்கம் என்ன? நமது இலக்கு எதை நோக்கி என்பதை உயிர்த்த இயேசு அனுபவம் அவர்களுக்குக் கற்றுத் தந்திருந்தது.

ஆயிரக்கணக்கானவர்கள் நடுவில் இயேசுவின் உயிர்ப்பை உரக்க அறிக்கையிட்டனர். தலைமைச் சங்கத்தில் விசாரிக்கப்பட்டாலும் கைது செய்து கடுங்காவலில் வைத்தாலும், நையப்புடைத்தாலும் மகிழ்ச்சியாய் இன்னும் ஆற்றலாய் பணி செய்தனர். கடவுளுக்கு முன் தங்கள் உயிரோ உடலோ அவமதிப்புகளோ அவர்களுக்குப் பொருட்டாகவே தெரியவில்லை. அதற்கு காரணம் இயேசுவின் உயிர்ப்பு அளித்த அழகிய அளவில்லா விவரிக்க இயலா அனுபவம். அது தந்த எதிர்நோக்கும் நம்பிக்கையுமே எனலாம்.

இயேசுவின் தனிப்பட்ட அழைப்பைப் பெற்ற தூய பவுல் உயிர்த்த இயேசு அனுபவம் பற்றி இவ்வாறு கூறுவார். 'கிறிஸ்து... மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர்... பன்னிருவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார்' (1 கொரி 15:8) உயிர்த்த இயேசு அனுபவமே 'இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர்' (1 கொரி 15.20) என்ற எதிர்நோக்கிற்கு இட்டு செல்லுகிறது.

இயேசுவின் உயிர்ப்பை சீடர்கள் அணு அணுவாய் அனுபவித்தார்கள். அவர்களுக்கு இறைவனின் மாட்சிமை பொருந்திய விண்ணக பேரின்பமும் நிலைவாழ்வும் மட்டுமே எதிர்நோக்காக இருந்தது. எதிர்நோக்கியதில் அசையா நம்பிக்கை கொண்டிருந்ததால் வேறு எந்த சூழல்களும், வலிகளும் நெருக்கடிகள், துன்பங்களும் அவர்களை துளியும் அசைக்க முடியவில்லை.

சீடர்களில் விளங்கிய உறுதியூட்டத்தை நாமும் பெற்று பணிவாழ்வில் பயணிப்போம். 'நாம் இறைவார்த்தையின் தலைவர்களோ அல்லது உரிமையாளர்களோ அல்ல. மாறாக அதன் பாதுகாவலர்களும் அறிப்பாளர்களும் பணியாளர்களுமாய் இருக்கிறோம். உயிர்த்த இயேசுவை ஆழ்ந்து அனுபவித்தால் மட்டுமே அறிவித்தல் மக்களைச் சென்றடையும்' என்கிறார் நம் திருத்தந்தை அவர்கள்.

நாமும் மகதலா மரியாவாக இயேசுவைக் கண்டு கொண்டு நற்செய்தியை அறிவிக்க விரைவோம்.. எம்மாவு சீடர்களாக அவரோடு நடப்போம். நம் இதய இல்லத்தில் அவரைத் தங்க வைப்போம். தெளிவும் தீர்க்கமும் பெறுவோம்.

இயேசுவின் தலைமைச் சீடர் போல் பொறுப்பேற்று வழி நடத்துவோம். இயேசுவின் அன்புச் சீடராக அவரின் திருவுளத்தை வெளிப்படுத்துவோம். இயேசுவுக்கு உகந்த சீடர்களாக நற்செய்தியைப் பறைசாற்றி பற்றிக்கொண்ட எதிர்நோக்கை நோக்கி நம்பிக்கையின் திருப்பயணிகளாக தொடர்ந்து பயணித்து இயேசுவின் உயிர்ப்பை அனுபவித்து வாழ்வோம்.

நற்பணி **ஜெஸி. P.**

## ஏப்ரல் 2025 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02. | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 05-06. | தவக்காலத் தியானம் | கொம்படி மதுரை பங்கு |
| 06. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி<br>காளையார்கோவில் |
| 06. | தவக்காலத் தியானம் | நகரிகாத்தான் |
| 11 - 12 | தவக்காலத் களப்பணி திறனாய்வு | அமல அன்னை அமைதியகம். |
| 12. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில்<br>தங்கச்சிமடம் |
| 13. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில்<br>இராமநாதபுரம்.<br>வியான்னி அருள்பணி மையம்.<br>சிவகங்கை.<br>புனித அருளான்ந்தர் திருத்தலம்.<br>ஓரியூர். |
| 15. | தவக்காலத் தியானம் | வலையம்பட்டி |
| 27. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம்.<br>காயாவயல்.<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில்<br>சாயல்குடி<br>தூய ஆவியார் கோவில்.<br>இராஜசிங்கமங்கலம்<br>புனித அடைக்கல மாதா கோவில்<br>திருமயம் |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| நன்மை செய்வதில் நீங்கள் ஆர்வமுடையவர்களாய் இருந்தால், உங்களுக்குத் தீமை செய்யப்போகிறவர் யார்? | **1 பேதுரு 3:13** |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 06.04.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| 06.04.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 12.04.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி X. லூர்து மேரி<br>நற்பணி J. ரபேக்கா |
| 13.04.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம் |
| 13.04.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 13.04.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 27.04.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி S. சகாயராணி<br>நற்பணி S. பால்ராஜ் |
| 27.04.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன்<br>செயலர் |
| 27.04.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 27.04.25 | அடைக்கமாதா கோவில் திருமயம் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி L. ஆரோக்கியசாமி |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

அடுத்தவரிடம் பேச நேரமில்லாமல் சிலர்....
அடுத்தவரிடம் பேச மனமில்லாமல் சிலர் ...
மனம் விட்டுப் பேசுவதற்கு யாருமில்லாமல் சிலர்...

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

"ஆறுதல் கூறுங்கள்; என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்" என்கிறார் கடவுள். (எசாயா 40:1)

'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே6:16).

நம் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெற நாம் அணிந்து கொள்ள வேண்டிய படைக்கலன்கள் பற்றியும் நாம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டிய படைக்கலன்கள் பற்றியும் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை மிதியடிகளாகப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தியானித்தோம். எந்த வகைகளிலெல்லாம் நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து தியானித்து வந்தோம். இந்த மாதத்தில் அடுத்த படைக்கலனான நம்பிக்கை பற்றித் தியானிக்க இருக்கின்றோம்.

புனித பவுல் சாத்தானோடு நமக்குள்ள போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றவர்களாய் நிலை வாழ்வு என்னும் வெற்றிவாகை சூடுவதற்கு ஆறு விதமான போர் கருவிகளைப் பயன்படுத்தச் சொல்கிறார் 1. உண்மை. 2. நீதி. 3.நற்செய்தி அறிவிப்பதற்கான ஆயத்த நிலை. 4.நம்பிக்கை. 5.மீட்பு. 6.இறைவார்த்தை. இந்த ஆறு ஆயுதங்களில் நான்கை நம் உடலில் அணிந்து கொள்ளச் சொல்கின்றார். இரண்டை நம் இரு கைகளிலும் பிடித்துக் கொள்ளச் சொல்கிறார். கேடயம் என்பது எதிரிகள் நம் மீது வீசும் ஆயுதங்கள் நம்மை தாக்காமல் தற்காத்துக் கொள்ள பயன்படுத்தப்படும் மறைப்பு. இது பண்டைக் காலத்தில் போர் கருவிகளான ஈட்டி, அம்பு, குறுவாள், வாள் போன்றவற்றிலிருந்து போர்வீரர்கள் தங்களை காத்துக் கொள்ளப் பயன்படுத்தும் ஆயுதம். இன்றைக்கு நம் காவல்துறை நண்பர்கள் கலவரங்களின் போது வெடிக்கும் வன்முறைகளில் வீசப்படும் கற்கள், கம்புகள் போன்றவற்றிலிருந்து தங்களை காத்துக் கொள்ள மூங்கிலால் செய்யப்பட்ட செவ்வக வடிவிலோ அல்லது நீள் வட்ட வடிவிலோ ஆன தட்டிகளை கையில் பிடித்திருப்பதை நாம் அனைவரும் பார்த்திருப்போம்.

இன்றைக்கு போர்க்காலங்களில் ஏவுகணைகள் வீசப்படுவதை நாம் செய்திகளிலே பார்த்திருக்கிறோம். இதேபோல்தான் சாத்தானும் நமது ஆவிக்குரிய வாழ்க்கை போராட்டத்தில் அவநம்பிக்கை என்னும் தீக்கணைகளை எல்லாம் ஏவி விடுகிறான். சாத்தான் ஏவி விடுகின்ற இந்த தீக்கணைகளை எல்லாம் அணைத்து விட நம்பிக்கை என்னும் கேடயம் நம்மிடம் வலுவானதாக இருக்க வேண்டும். நாம் பழைய ஏற்பாட்டில் பலவிதமான போர்களைப் பற்றி வாசிக்கின்றோம். அதில் நிறைய இடங்களில் நகர்கள் தீக்கிரையாக்கப்பட்டன என்று வாசிக்கிறோம். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு பின் கி.பி 70 ஆம் ஆண்டில் உரோம படை எருசலேமை முற்றுகையிட்டு எருசலேம் ஆலயத்தைத் தீக்கிரையாக்கியது. தீ எதன் மீது படுகிறதோ அது அனைத்தையும் சுட்டெரித்துவிடும் எதனையும் விட்டு வைக்காது.

உரோமானிய படைகள் செலுத்திய தீக்கணைகள் இஸ்ரேல் மக்களின் நம்பிக்கையான இறைவனின் இல்லம் என்று சொல்லப்பட்ட மகிமை நிறைந்த எருசலேம் ஆலயத்தை எரித்து ஒன்றுமில்லாமல் செய்தது போல், நம்பிக்கை என்னும் கேடயத்தை நாம் சரிவர கையாளவில்லை என்றால் நம் ஆவிக்குரிய வாழ்க்கையும் தீக்கிரைக்கு உள்ளாக்கப்பட்டுவிடும். நம்பிக்கை வாழ்வு வாழ்வதற்கு

நம் இறுதி மூச்சு வரை நமக்கு போராட்டங்கள் உண்டு. நம்பிக்கை என்பது நங்கூரம் போன்றது. கடலில் அலைகளால் அலைக்கழிக்கப்படும் கப்பலை அசையாமல் ஓரிடத்தில் நிறுத்துவதற்கு நங்கூரத்தைப் பயன்படுத்துவார்கள். நங்கூரமிடப்பட்ட கப்பல் நகர்ந்து விடாமல் எந்த புயலுக்கும் சுனாமிக்கும் அசையாமல் அப்படியே நிற்கும். 'எதிர்நோக்கு நம் உள்ளத்திற்கு பாதுகாப்பான, உறுதியான நங்கூரம் போன்றுள்ளது' (எபி6:19) என்று புனித பவுல் கூறுகின்றார். நாமும் நம்பிக்கை என்னும் நங்கூரத்தைப் பயன்படுத்தினால் தான் பாவத்தால் பாவ சிந்தனைகளால் அலைக்கழிக்கப்படும் இவ்வுலக வாழ்வில் அங்குமிங்கும் தேடி ஓடாமல் ஆவிக்குரிய வாழ்வில் நிலைத்து நிற்க முடியும்.

ஒருவர் எவ்வளவு பெரிய வல்லமையான நற்செய்திப் பணியாளராக இருந்தாலும் அலகை எப்போதும் அவரை நோக்கித் தீக்கணைகளை எறிந்து கொண்டே தான் இருப்பான். நம் கையில் உள்ள நம்பிக்கை என்னும் கேடயத்தை கவனமாகக் கையாள நாம் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அந்த ஆற்றலை நாம் நமது சுய பலத்தாலோ, முயற்சியாலோ, பயிற்சியாலோ பெற்றுவிட முடியாது. அந்த ஆற்றலை நமக்குத் தருபவர் தூய ஆவியானவரே. ஆவியானவரின் துணையோடும் ஆற்றலோடும் தான் நம்மால் அலகை எய்கின்ற அக்கினி அம்புகளைத் தடுத்து நிறுத்த முடியும். ஆவியானவரின் ஆற்றல், வல்லமை நம்முள் செயல்பட நம்மை நாம் அர்ப்பணிக்கும் போதும் நம் சுயத்தை விட்டு விட்டு நம்மை வெறுமையாக்கும் போது கடவுளையே நம்பி இருக்கும் கேடயம் நமக்கு விண்ணகப் பரிசாக தரப்படும். எனவே நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப்பற்றிக் கொள்வோம் சாத்தானின் தீக்கணைகளை எதிர்த்து நிற்போம்.

## புனித இசிதோர்



''ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்' (தொநூ 2:15).

புனித இசிதோர் ஸ்பெயின் நாட்டில் உள்ள மாட்ரிட் என்னும் இடத்தில் 1070 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய குடும்பம் ஒரு சாதாரண விவசாயக் குடும்பம் ஆனாலும் பக்தியில் முன்மாதிரியான குடும்பம். அதனால் இசிதோர் சிறுவயது முதலே பக்தியிலும் ஒழுக்கத்திலும் பிறரன்புச் சேவையிலும் சிறந்து விளங்கி வந்தார். இசிதோருக்கு திருமண வயது வந்தபோது மரியா தே லா பொஸா என்பவருக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார். இவர் பின்னாளில் ஒரு புனிதையாக உயர்ந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இசிதோர் தன்னுடைய சொந்த ஊரில் இருந்த ஜான் தே வர்கீஸ் என்பவருடைய தோட்டத்தில் வேலை பார்த்து வந்தார், நிலத்தை உழுவதாகட்டும், அதில் பயிரிடுவதாக இருக்கட்டும், பயிரிட்டத்தை அறுவடை செய்வதாக இருக்கட்டும்

எல்லா வேலையையும் இசிதோர் மிகவும் சிறப்புடன் பணியாற்றி வந்தார். இதனால் இவரைக் குறித்து முதலாளிக்கு நன்மதிப்பு உண்டானது.

இசிதோர் தான் செய்து வந்த விவசாய வேலைகளுக்கு மத்தியிலும் கோவிலுக்குச் செல்வதற்கும் காலைத் திருப்பலியிலும் கலந்துகொள்வதற்கும் தவறுவதில்லை ஒவ்வொரு நாளும் பங்கு கோவிலில் நடைபெறக்கூடிய திருப்பலியில் தவறாது கலந்துகொண்டு வந்தார். இதற்கு மத்தியில் இசிதாரோடு வேலை பார்த்துவந்த மற்ற பணியாளர்கள் இசிதோர் எப்போதுமே வேலைக்கு தாமதாகவே வருகின்றார் என்று முதலாளியிடம் முறையிட்டனர். இதனால் சினமடைந்த முதலாளி ஜான தே வர்கீஸ் இசிதோரை சோதித்துப் பார்க்க விரும்பினார்.

அவர் இசிதோரை நோட்டம் விடத் தொடங்கினார். இசிதோர் அதிகாலையில் திருப்பலிக்குச் செல்வதைப் பார்த்த முதலாளி, தோட்டத்திற்குத் தாமதமாகத்தான் வருவார் என்று நினைத்து கொண்டிருந்தார். ஆனால், அவருடைய இடத்தில் இன்னொருவர் அதாவது வானதூதர் வேலை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். அதன்பிறகு தோட்டத்தின் முதலாளி இசிதோரை சந்தேகப்படுவதில்லை. இசிதோர் எப்போதும் போல் காலைத் திருப்பலியில் கலந்துகொண்டுவிட்டு சரியான நேரத்தில் தோட்டத்திற்கு வந்து வேலை பார்த்து வந்தார்.

இசிதோருக்கு வயது ஆக ஆக, அவருடைய உடல் நலம் குன்றியது. அத்தகைய சூழ்நிலையிலும் அவர் செபிப்பதற்கும் திருப்பலியில் கலந்துகொள்வதற்கும் தவறுவது இல்லை இசிதோர் 1130ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

இசிதோர இறந்தபிறகு அவருடைய பெயரில் நிறைய புதுமைகள் நடந்தன. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மூன்றாம் பிலிப் என்ற மன்னன இசிதோரின் புனிதப் பொருட்களை தன்னுடைய அரண்மனைக்கு எடுத்துக்கொண்டு வந்து செபித்தபோது அவரிடம் இருந்த தீராத நோய் நீங்கியது, அது போல அல்போன்சோ என்ற மன்னன் எதிரி நாட்டவரோடு போர் தொடுக்கச் சென்றபோது இசிதோரின் பரிந்துரையைப் பெற்று போரில் வெற்றி பெற்றான்.

**கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்:**

'நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். (யோவா 15: 5).

புனித இசிதோரைப் போன்று இறைவனோடு இணைந்திருப்போம். இறைவனுக்கு உகந்த வழியில் நடப்போம். அதன்வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம் www.arulchandrunilayam.org




அன்பின் அதிர்வலைகள் தான் நாம் பேசும் அன்பின் மொழிகள். அந்த அன்பின் மொழிகளை பற்றியும் அதில் முதல் இரண்டு அன்பின் மொழிகள் பற்றியும் கடந்த பகுதிகளில் பார்த்தோம். இந்த பகுதியில் மூன்றாவது அன்பின் மொழியான பரிசு பெறுதல் பற்றி பார்ப்போம். பரிசு பெறுதல் என்பது அன்பின் வெளிப்பாடு. அதனால் தான் நமது குடும்ப விழாக்களில் பரிசு வழங்குதல் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

**பாசத்தின் பிரதிபலிப்பு பரிசு :**

சுதாகர் பல ஆண்டுகளாக தன் குடும்பத்தை விட்டு அயல் நாட்டில் வேலை செய்து வந்தான். தன் பெற்றோருக்கும், தங்கைக்கும் தேவைகளையும், அடிப்படை வசதிகளை செய்து முடிக்கும் பொருட்டு தொடர்ந்து வேலை செய்து வந்தான். விடுமுறைக்கு வாய்ப்பு வந்தாலும் ஊருக்கு செல்வதில்லை. காரணம் விடுமுறை சென்றுவரும் பணத்தை மிச்சப்படுத்தினால், குடும்ப கடனை விரைவில் அடைத்துவிடலாம் என்ற ஆசை தான். சுதாகரின் நண்பன் 'எப்படி உன்னால் மட்டும் உனது பெற்றோரை பார்க்காமல் தொடர்ந்து இங்கேயே வேலை செய்ய முடிகிறது'. எனக் கேட்க, அதற்கு சுதாகர்: ''எனது பெற்றோர் எனக்காக கொடுத்த சிறிய நினைவு பரிசுகளை என்னோடு வைத்துள்ளேன். அவற்றை நான் அவ்வப்போது பார்க்கும் போது, அவை எனக்கு வெறும் பொருளாக மட்டும் தெரிவதில்லை. மாறாக பெற்றோரின் தியாகம் நிறைந்த, அளவு கடந்த பாசத்தின் அடையாளமாக தெரிவதால், அவர்களே என்னோடு இருப்பதாக உணர்கிறேன்'' என சொல்லி முடித்தான்.

நம்முடைய அன்பிற்குரியவர்கள் தரும் சிறிய பரிசு பொருட்கள் ஒரு உண்மையான அன்பின் வெளிப்பாடு ஆகும். ஒரு சிலருக்கு என்னதான் சொல்லி நமது அன்பை வெளிபடுத்தினாலும், சிறிய பரிசு பொருட்களை பெரும்பொழுதே அவர்கள் தாங்கள் முழுமையாக அன்பு செய்யபடுவதாக உணர்கின்றனர். பரிசு பெறுதல் என்பது ஒரு வகையான அன்பின் மொழியாகும். அதை சரியாக, சரியான நபர்களிடம் பயன்படுத்தும் போது அன்பின் மேன்மையை நாமும் மற்றவர்களும் உணர்வோம்.

**பயத்தை விரட்டும் பரிசு :**

நாட்டின் எல்லையில் இருந்த வீரன் மன துணிச்சலோடு பல மாதங்கள் போரில் ஈடுபட்டு வந்தான். தினமும் இரவு தூங்கும் முன் ஏதோ ஒரு பேப்பரை எடுத்து பார்த்துவிட்டு தூங்கும் பழக்கத்தை அவன் நண்பர்கள் பல முறை.

பார்த்துள்ளனர். நாட்கள் நடந்து சென்றன. கடுமையான துப்பாக்கி சூட்டில் அந்த இரணுவ வீரன் இறந்து போக, அவனது உடலை அவனது குடும்ப உறுப்பினர்களுக்கு ஒப்படைத்தனர். அப்போது அந்த இராணுவ வீரனின் நண்பர்களும், பள்ளி தோழர்களும், அவனது ஆசிரியர்களும் உடன் இருந்தனர். போரில் கடைசியாக அணிந்திருந்த சட்டையில் ஒரு பொருள் மட்டுமே இருந்தது. அது ஒரு பழைய கிழிந்த பேப்பர். அதை படித்து பார்த்தவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அந்த ஆசிரியருக்குத் தெரிந்தது. அவர்கள் கண்ணீரோடு "இந்த காகிதத்தை எனது இந்த மாணவனுக்கு ஐந்தாம் வகுப்பு முடித்து பிரியாவிடை கொடுக்கும் விழாவில் நான் பாரிசாக கொடுத்தேன். அதில் அவனுடைய நற்பண்புகளை அனைத்து வகுப்பு தோழர்களும் எழுதி கையொப்பம் இட்டிருந்தனர். நானும் எழதி கையெழுத்து இட்டுருந்தேன். ஆனால் இறுதி மரணம் வரை அதை பத்திரமாக வைத்திருப்பான் என்பதை நானே எதிர்பார்க்கவில்லை" எனச் சொல்லி அழுதார்கள். அந்த போர்களத்தில் அதிக நாட்கள் பயம் இல்லாமல் எதிர்களை வீழ்த்த உதவியாக இருந்தது அந்த ஆசிரியரின் சிறிய பரிசுதான் என்பது அங்கிருந்த அவனது இராணுவ தோழர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது..

**விவிலிய பின்னனி :**

- மூன்று ஞானிகள் பிறந்த இயேசு பாலகனுக்கு பரிசளித்தனர் (மத் 2:11).
- இயேசு இறையாசியை பரப்பிக்கொண்டே பலரையும் குணப்படுத்தினார் (மத் 4:23).
- யேசுவின் மன்னிப்பு என்ற பரிசை மற்றவர்களுக்கு வழங்கினார் ( லூக் 5:20).

**நடைமுறை செயலுக்கம் :**

**எதிர்பாராத பரிசு :** சொல்லாமல் தங்களுக்கு பிடித்த நபர்கருக்கு பரிசாக சில சில பொருட்களை தயார் செய்து கொடுப்பது

**நினைவு பரிசுகள் :** நண்பர்கள் தங்களின் வாழ்வின் நிகழ்வுகளை நினைத்து மகிழும்படி சில பாசுகளை வழங்குதல்.

**சிறிய அன்பு பரிசுகள்:** பெற்றோர்கள் தங்கள் அன்பின் அடையாளமாக சிறுசிறு பரிசுகளை தங்கள் குழந்தைகளுக்கு தந்து மகிழ்ச்சி அடையளாம்.

**அசைபோட அரை நிட்டம்:**

அன்பு பரிசுகள் அன்பின் அதிர்வலைகளாக மாறுகின்றன.

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

# யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதருக்கு அவர் கட்டளையிடுவார் என்ற வாக்குறுதியை அறிந்தும் ஆண்டவரின் உடனிருப்பை உணர மறந்து வாழ்ந்து வந்ததை எண்ணி மனம்வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 91:11).
- நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும் என்பதை அறியாமல் இறைவார்த்தைக்கு முரணாக வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (யோவா 15:7).
- இதோ என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன் என்பதை உணராமல் தாழ்வு மனப்பான்மையோடு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (எசா 49:16).
- குழந்தாய் பணிவிலே நீ பொறுமைகொள். என்பதை மறந்து பணிவின்றி அகம்பாவத்தோடு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (சீராக் 10:28).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

# செப வீரர்களுக்கு

**இம் மாத செபக் கருத்து**

- புதிய தொழில்நுட்பங்கள் மனித மேம்பாட்டிற்கு உதவவும் மனித உறவை வலுப்படுத்தும் காரணிகளாகிட
- சமூக ஊடகங்களுக்கு மனிதர்கள் அடிமைகளாகாமல் நேர்மறை செயல்பாடுகளுக்கு பயன்படுத்த.
- தவக்கால களப்பணிகள் கனிகொடுக்கும், விடுதலை கொடுக்கும் நிகழ்வாகிட
- கோடைகாலத்தில் நீர் வறட்சியால் உயிரினங்கள் அழிவினின்று காப்பற்றப்பட
- திருத்தந்தையின் உடல் உள்ள நலன்களுக்காக
- யூபிலி ஆண்டில் கத்தோலிக்க அருள் அவையில் அனைவரும் நம்பிக்கை வாழ்வில் எழுச்சியுற
- இந்தியாவில் சனநாயக, மதச்சார்பின்மை கூட்டாட்சி கொள்கைளும், அமைப்புகளும் பாதுகாக்கப்பட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- புனித வாரத்தில் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் பயன்படுத்தலை முற்றிலும் தவிர்த்தல்.
- புலனடக்கத்தை கடைப்பிடித்து எளிமையாய் வாழ்தல்.

# தவக்கால களப்பணிகள் - 2025













படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **உரோமையர் 4,5,6 அதிகாரங்களுக்குள்**


தவக்கால களப்பணிகள் - 2025


















(தனிச்சுற்றுக்கு மட்டும்)

**Narseithi Paniyalar**

is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Paramakudi - 623 707, Ramnad Dist.

www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com